**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**முன்னிலை : திருமதி. மு.அலிமா, பி.ஏ., எல்.எல்.எம்,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
**நாகர்கோவில்.**
2024–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16–ம் நாள் சனிக்கிழமை

**இ.ம.எண். 01/2023 இன் அ.வ.எண்.129/2023**

1. சரஸ்வதி
2. விஜயகுமாரி . . . மனுதாரர்கள்/ வாதிகள்

/ எதிர் /

S. கிருஷ்ணகுமார் . . . எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது 21.10.2024 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. நம்பிராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N. ரெத்தினசாமி அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, இருதரப்பு வாத உரை மற்றும் அசல் வழக்குக் கோப்பு ஆகியவைகளை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்துவந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உ த் த ர வு**

இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகளால், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ், மனு தபசில் சொத்திலிருந்து 1–வது மனுதாரரை எதிர்மனுதாரரோ, அவரது வகையாட்களோ, ஏஜெண்டுகளோ, முகவர்களோ சட்டத்திற்கு புறம்பாக காலி செய்யக்கூடாதென அசல் வழக்கு முடியும் வரை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க கோரியும், அது போன்று இந்த மனு முடியும் வரை ஒரு இடைக்கால தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்** :

மனுதாரர் இம்மனுவின் 1–வது மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 1–வது வாதி என்றும், எதிர்மனுதாரரும், 2–வது மனுதாரரும் 1–வது மனுதாரரின் மக்கள் என்றும், மனு தபசில் சொத்து 1–வது மனுதாரரின் கணவரும், 2–வது மனுதாரர் மற்றும்

எதிர்மனுதாரரின் தகப்பனாருமான காலஞ்சென்ற ஸ்ரீதரன் என்பவரால் சுயார்ஜிதமாக 1–வது மனுதாரர் பெயரில் 23.12.1981–ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் வாங்கப்பட்ட சொத்து என்றும், மேற்படி சொத்தை காலஞ்சென்ற ஸ்ரீதரன் என்பவரும், அவரது மனைவியான 1–வது மனுதாரரும் தீர்வை முதலானவை செலுத்தி யாருடைய இடைஞ்சலுமின்றி சர்வ சுதந்திரமாக ஆண்டனுபவம் செய்து வந்தனர் என்றும், இந்நிலையில் மனு தபசில் சொத்தை பொறுத்து மேற்படி ஸ்ரீதரன் என்பவரும், அவரது மனைவியான 1–வது மனுதாரரும் கடந்த 05.06.1992–ம் தேதியில் 2–வது மனுதாரர் பெயருக்கு ஒரு அடமான ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தனர் என்றும், அவ்வாறு அடமான ஆவணம் ஏற்படுத்தி கொடுத்திருந்த போதிலும், மேற்படி ஸ்ரீதரன் என்பவரும், அவரது மனைவியான 1–வது மனுதாரரும் மனு தபசில் சொத்தில் தான் குடியிருந்து வந்தனர் என்றும், எதிர்மனுதாரர், 2–வது மனுதாரருக்குரிய 30 பவுன் தங்க நகைகளை வாங்கி அடமானம் வைத்து எதிர்மனுதாரர் தற்போது |குடியிருந்து வரும் வீட்டினை கட்டியுள்ளார் என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர் கடந்த 20.11.2005–ம் தேதியில் மனு தபசில் சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து மனு தபசில் சொத்தில் உள்ள கட்டிடத்தை இடிக்க முயற்சி செய்தார் என்றும், மேற்படி எதிர்மனுதாரரின் முயற்சியை மேற்படி காலஞ்சென்ற ஸ்ரீதரன் என்பவர் தடுத்து நிறுத்தினார் என்றும், அதன்பின்பு தான் எதிர்மனுதாரர் கடந்த 02.12.2004–ம் தேதியன்று 1–வது மனுதாரரிடமிருந்து மோசடியாக கிரைய ஆவணம் எழுதி வாங்கிய விபரம் தெரியவந்தது என்றும், மேலும் அந்த சமயத்தில் எதிர்மனுதாரர் 1–வது மனுதாரரிடம் குடிசை தொழில் தொடங்குவதற்கு ரூ.1,00,000/– தேவைப்படுவதாகவும், அதனால் மனுதபசில் சொத்தை அடமான ஆவணம் ஏற்படுத்தி கொடுத்து மேற்படி பணத்தை தரும்படியும், மேற்படி பணத்தை ஒரு வருட காலத்திற்குள் திருப்பி தருவதாகவும் கூறினார் என்றும், மேலும் மேற்படி ஆவணம் ஏற்படுத்தி கொடுப்பதை எதிர்மனுதாரர் 1–வது மனுதாரரிடம், மேற்படி ஸ்ரீதரன் என்பவரிடம் தெரிவிக்க வேண்டாம் என்றும் கேட்டுகொண்டார் என்றும், 1–வது மனுதாரருக்கு படிப்பறிவு இல்லாத காரணத்தை பயன்படுத்தி கொண்ட எதிர்மனுதாரர் அவரது பெயருக்கு கடந்த 02.12.2004–ம் தேதியன்று கிரைய ஆவணம் எழுதி பெற்றுகொண்ட விபரம் தெரியவந்தது என்றும், மேற்படி விபரம் தெரியவந்தவுடன் மேற்படி காலஞ்சென்ற ஸ்ரீதரன் என்பவரும், 1–வது மனுதாரரும் மேற்படி எதிர்மனுதாரர் பெயரில் உள்ள 02.12.2004–ம் தேதியிட்ட மோசடியான கிரைய ஆவணத்தை ரத்து செய்யக் கேட்டு நாகர்கோவில், இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.165/2005–ஐ தாக்கல்

செய்தனர் என்றும், மேற்படி வழக்கு முழு விசாரணைக்கு பின்பு கடந்த 23.08.2006–ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேற்படி தீர்ப்பினை எதிர்த்து மேற்படி காலஞ்சென்ற ஸ்ரீதரன் என்பவரும், 1–வது மனுதாரரும் கன்னியாகுமரி மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். 45/2006 தாக்கல் செய்தனர் என்றும், மேற்படி மேல்முறையீட்டு வழக்கும் முழு விசாரணைக்கு பின்பு கடந்த 30.03.2012–ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேற்படி ஸ்ரீதரன் என்பவரும், 1–வது மனுதாரரும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இரண்டாம் மேல்முறையீடு S.A.(MD).No.722/2012 தாக்கல் செய்தனர் என்றும். மேற்படி இரண்டாம் மேல்முறையீடு நிலுவையில் இருந்த சமயத்தில் காலஞ்சென்ற 1–வது மனுதாரரின் கணவருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டு இரு தரப்பினர்களாலும் மேற்படி தாவாவை சமரச மையம் மூலம் முடித்துகொள்வதாகவும், அதன்படி எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்களான மேற்படி ஸ்ரீதரன் என்பவரையும், 1–வது மனுதாரரையும் தங்களது கடைசி காலம் வரை எந்தவித தொந்தரவும் செய்யமாட்டேன் எனவும், மேற்படி காலஞ்சென்ற ஸ்ரீதரன் என்பவரையும், 1–வது மனுதாரரையும் தங்களது கடைசிக்காலம் வரை மனு தபசில் வீட்டிற்குள் குடியிருக்க அனுமதி வழங்குவதாகவும் உறுதியளித்தார் என்றும், மேற்படி வாக்குறுதியின் அடிப்படையில் கடந்த 26.08.2019–ம் தேதியன்று சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு மேற்படி இரண்டாம் மேல்முறையீடு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் முடித்து வைக்கப்பட்டது என்றும், அதன்படி காலஞ்சென்ற ஸ்ரீதரன் என்பவரும், 1–வது மனுதாரரும் மனுதபசில் சொத்தில் எவ்வித இடைஞ்சலுமின்றி குடியிருந்து வந்தனர் என்றும், இந்நிலையில் மேற்படி ஸ்ரீதரன் என்பவர் அவரது மனைவியான 1–வது மனுதாரரையும், மக்களான 2–வது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரையும் வாரிசுகளாக விட்டுவிட்டு 17.10.2021–ம் தேதியில் மனு தபசில் சொத்து வீட்டில் வைத்து காலஞ்சென்று விட்டார் என்றும், அதன்பின்பு 1–வது மனுதாரரை 2–வது மனுதாரர் தான் உடனிருந்து அவருக்கு தேவையான உணவு, உடை, உறையுள் போன்ற அடிப்படை தேவைகளை செய்து வருகிறார் என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒப்புகொண்டு பிறப்பிக்கப்பட்ட சமாதான தீர்ப்புரைக்கு விரோதமாக கடந்த 20.03.2023–ம் தேதியன்று மனு தபசில் சொத்தில் 1–வது மனுதாரர், தனது மகளான 2–வது மனுதரரரின் உதவியுடன்

குடியிருந்து வருவதை இடைஞ்சல் செய்து மேற்படி தங்களை மனு தபசில் சொத்திலிருந்து வெளியேற்ற முயற்சி செய்தார் என்றும், மேற்படி எதிர்மனுதாரரின் செயலை மனுதாரர்கள் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் தடுத்து நிறுத்தினார்கள் என்றும், இருந்த போதிலும் இன்னும் ஒரு வார காலத்திற்குள் தங்களை மனு தபசில் சொத்திலிருந்து அப்புறப்படுத்தி விடுவதாக வர்மித்து சென்றார் என்றும், மேலும் மனுதாரர்களுக்கு வழக்கில் நல்ல கட்சியிருக்கிறது என்றும், மேலும் மனுதாரர்கள் தங்கள் வழக்கை மெய்ப்பிக்க தகுந்த ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்களுக்கு முதல்நிலை வழக்கு உள்ளது என்றும், நீதியின் அளவுகோலும், சமநிலை பரிகாரமும் மனுதாரர்களுக்கு சாதகமாக உள்ளது என்றும், இம்மனு அனுமதிக்கப்படாத பட்சத்தில் மனுதாரர்களுக்கு அளவிட முடியாத அளவிற்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்றும், எனவே அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க கோரி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u> :

எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை இம்மனுவின் எதிருரையாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், 1–வது மனுதாரர்/1–வது வாதியால் வழக்கில் கேட்கப்பட்டுள்ள பரிகாரம் இதற்கு முன்பாக மாண்புமிகு இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.165/2005 வழக்கிலும் மற்றும் மாண்புமிகு மாவட்ட நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண். 45/2006 மற்றும் நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை S.A.(MD).No.722/2012–ன் 26.08.2019–ல் ஏற்பட்ட சமாதானத்தின்படியும் முடிவு காணப்பட்டு விட்டது என்றும், அசல் வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கு எண். 165/2005 வழக்கின் தீர்ப்பானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வரையில் சென்று வாதியை சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்றக்கூடாது என முடிவு காணப்பட்டு விட்டது என்றும், இந்த வழக்கு குறித்தவகை நிவாரண சட்டம் (Specific Relief Act)–ன் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது என்றும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாவது மேல்முறையீட்டு எண்.S.A.

(MD).No.722/2012–ன் சமாதான உட்பிரிவு எண்.4–ன்படி வாதி இந்த வழக்கு தாக்கல் செய்ய எந்த தகுதியும் இல்லையென்றும், 02.12.2014–ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என மனுதாரர்/வாதி கூறுவது உண்மையல்ல என்றும், மேற்படி கிரைய ஆவணம் செல்லத்தக்கது மற்றும் தரப்பினர்களை கட்டுப்படுத்தக்கூடியது என்றும், 2–வது வாதி மட்டுமே தபசில் சொத்தில் அனுபவத்தில் இருக்கிறார் என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக வழக்கில் சொல்லியுள்ள தகவல்கள் உண்மையல்ல என்றும், 1–வது பிரதிவாதியால் 2–வது வாதி, அவரது கணவர் மற்றும் மற்றவர்களுக்கு எதிராக எதிர்மனுதாரர்/பிரதிவாதியை தாக்கியதற்காக இரணியல் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் காரணமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 20.03.2023–ல், 1–வது மனுதாரர்/1–வது வாதியை, எதிர்மனுதாரர்/பிரதிவாதி காலி செய்ய முயற்சித்தார் என்பது உண்மையல்ல என்றும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையின் உட்பிரிவு எண். 4–ல் 1–வது மனுதாரர்/1–வது வாதி மற்றும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி கீழ்கண்டவாறு உறுதி மொழி வழங்கியுள்ளனர் என்றும், "Appellants have no right to alter the house during their life time and the respondent also agreed that he will not alter, rental or sell the house during their life time" மேற்படி உறுதிமொழிக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்றும், 20.03.2023–ல் மனுதாரர் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி நீதிமன்றத்தை மதிக்கக்கூடியவர் என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் தந்தை 17.10.2021–ல் காலம் சென்றுவிட்டார் என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி அனைத்து ஈமச்சடங்களிலும் கலந்து கொண்டார் என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி, 1–வது மனுதாரர்/1–வது வாதியை காலி செய்ய முயற்சித்தார் என்பது உண்மையல்ல என்றும், எனவே மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவானது செலவு தொகையின்றி தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

4) <u>தீர்வுக்குரிய பிரச்சனை</u> :

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பில் எதிருரையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை, இரு தரப்பு வாதவுரை மற்றும் அசல் வழக்குக் கோப்பு ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள்/வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5) மனுதாரர்கள்/வாதிகளால் அசல் வழக்கானது, 1–வது வாதியை பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ, ஏஜெண்டுகளோ, முகவர்களோ சட்டத்திற்கு புறம்பாக காலி செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இம்மனுவானது மனு தபசில் சொத்திலிருந்து 1–வது மனுதாரர்/1–வது வாதியை எதிர்மனுதாரர்/பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ, ஏஜெண்டுகளோ, முகவர்களோ சட்டத்திற்கு புறம்பாக காலி செய்யக்கூடாதென அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

7) இம்மனுவின் 1வது மனுதாரரின் மக்கள் 2வது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் என்பதும், காலஞ்சென்ற 1வது மனுதாரரின் கணவர் ஸ்ரீதரன் மற்றும் இம்மனுவின் 1வது மனுதார் சேர்ந்து இம்மனுவின் எதிர்மனுதாரருக்கு எதிராக மாண்புமிகு இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண். 165/2005 வழக்கினை தபசில் சொத்து குறித்த 02.12.2004 தேதியிட்ட கிரய ஆவணத்தை ரத்து செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்தனர் என்பதும், மேற்படி வழக்கானது 23.08.2006 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதும், மேற்படி தீர்ப்பினை எதிர்த்து மேற்படி காலஞ்சென்ற ஸ்ரீதரன் என்பவரும், 1–வது மனுதாரரும் மாண்புமிகு கன்னியாகுமரி மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். 45/2006 தாக்கல் செய்தனர் என்றும், மேற்படி மேல்முறையீட்டு வழக்கும் முழு விசாரணைக்கு பின்பு கடந்த 30.03.2012–ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்பதும், மேற்படி மேல்முறையீட்டு வழக்கில்

பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேற்படி ஸ்ரீதரன் என்பவரும், 1-வது மனுதாரரும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இரண்டாம் மேல்முறையீடு S.A.(MD).No.722/2012 தாக்கல் செய்தனர் என்பதும், மேற்படி இரண்டாம் மேல்முறையீடு நிலுவையில் இருந்த சமயத்தில் காலஞ்சென்ற 1-வது மனுதாரரின் கணவருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டு இரு தரப்பினர்களாலும் மேற்படி தாவாவை சமரச மையம் மூலம் முடித்துகொள்வதாகவும், அதன்படி எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்களான மேற்படி ஸ்ரீதரன் என்பவரையும், 1-வது மனுதாரரையும் தங்களது கடைசி காலம் வரை எந்தவித தொந்தரவும் செய்யமாட்டேன் எனவும், மேற்படி காலஞ்சென்ற ஸ்ரீதரன் என்பவரையும், 1-வது மனுதாரரையும் தங்களது கடைசிக்காலம் வரை மனு தபசில் வீட்டிற்குள் குடியிருக்க அனுமதி வழங்குவதாகவும் உறுதியளித்தார் என்பதும், மேற்படி வாக்குறுதியின் அடிப்படையில் கடந்த 26.08.2019-ம் தேதியன்று சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு மேற்படி இரண்டாம் மேல்முறையீடு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் முடித்து வைக்கப்பட்டது என்பதும், அதன்படி 1-வது மனுதாரரும் அவரது கணவரும் மனுதபசில் சொத்தில் அனுபவத்தில் இருந்தனர் என்பதும், 1வது மனுதாரரின் கணவர் 17.10.2021-ம் தேதியில் காலஞ்சென்று விட்டார் என்பதும், இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும்.

8) இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் 1-வது மனுதாரரை 2-வது மனுதாரர் தான் உடனிருந்து அவருக்கு தேவையான உணவு, உடை, உறையுள் போன்ற அடிப்படை தேவைகளை செய்து வருகிறார் என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒப்புகொண்டு பிறப்பிக்கப்பட்ட சமாதான தீர்ப்புரைக்கு விரோதமாக கடந்த 20.03.2023-ம் தேதியன்று மனு தபசில் சொத்தில் 1-வது மனுதாரர், தனது மகளான 2-வது மனுதரரரின் உதவியுடன் குடியிருந்து வருவதை இடைஞ்சல் செய்து மேற்படி தங்களை மனு தபசில் சொத்திலிருந்து வெளியேற்ற முயற்சி செய்தார் என்றும், மேற்படி எதிர்மனுதாரரின் செயலை மனுதாரர்கள் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் தடுத்து நிறுத்தினார்கள் என்றும், இருந்த போதிலும் இன்னும் ஒரு வார காலத்திற்குள் தங்களை மனு தபசில் சொத்திலிருந்து அப்புறப்படுத்தி விடுவதாக வர்மித்து சென்றார் என்றும், கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

9) இம்மனுவில் எதிர்மனுதாரர் தரப்பில் அசல்வழக்கில் மனுதாரர்களால் கேட்கப்பட்டுள்ள பரிகாரம் நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை S.A.(MD).No.722/2012–ன் 26.08.2019–ல் ஏற்பட்ட சமாதானத்தின்படியும் முடிவு காணப்பட்டுவிட்டது என்றும், அசல் வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், இரண்டாவது மேல்முறையீட்டு எண்.S.A.(MD).No.722/2012–ன் சமாதான உட்பிரிவு எண்.4–ன்படி வாதி இந்த வழக்கு தாக்கல் செய்ய எந்த தகுதியும் இல்லையென்றும், பிரதிவாதியால் 2–வது வாதி, அவரது கணவர் மற்றும் மற்றவர்களுக்கு எதிராக எதிர்மனுதாரர்/பிரதிவாதியை தாக்கியதற்காக இரணியல் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் காரணமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 20.03.2023–ல், 1–வது மனுதாரர்/1–வது வாதியை, எதிர்மனுதாரர்/பிரதிவாதி காலி செய்ய முயற்சித்தார் என்பது உண்மையல்ல. மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

10) தற்பொழுது அசல் வழக்கானது ஆரம்ப நிலையில் உள்ளது. அசல் வழக்கின் முழுமையான சாட்சி விசாரணைக்கு பிறகே இந்நீதிமன்றத்தால் இரு தரப்பினர்களுக்கிடையேயான கீழ்க்கண்ட முக்கிய பிரச்சனைகளான,

i) அசல் வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்தும்,

ii) வாதிக்கு இந்த வழக்கு தாக்கல் செய்ய தகுதி உள்ளதா? என்பது குறித்தும்,

iii) 20.03.2023–ல், 1–வது மனுதாரர்/1–வது வாதியை, எதிர்மனுதாரர்/பிரதிவாதி காலி செய்ய முயற்சித்தாரா? என்பது குறித்தும், இந்நீதிமன்றத்தால் முடிவு காண இயலும்.

11) மேலும், தபசில் சொத்து மீதான 1–வது மனுதாரரின் அனுபவத்தை எதிர்மனுதாரர்/பிரதிவாதி இடையூறு செய்துவருகிறார் என்பதை நிரூபணம் செய்யும் வகையில் மனுதாரர்/வாதி தரப்பில் எவ்வித சாட்சி சான்றாவணங்களும்

இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பெறுவதற்கான முதன்மை தோற்ற வழக்கு, வசதிகளின் சமநிலை, ஈடுசெய்ய முடியாத இழப்பு 1–வது மனுதாரருக்கு ஆதரவாக உள்ளது என்பதை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சி சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

12) மனுதாரர்களால் அசல் வழக்கில் கேட்கப்பட்ட பரிகாரம் 1வது மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதா? இல்லையா? என்பதை இரு தரப்பு சாட்சி விசாரணைக்கு பிறகே இந்நீதிமன்றத்தால் முடிவு காணக்கூடிய நிலையில், அசல் வழக்கில் கேட்கப்பட்ட அதே பரிகாரம் (Main Relief) குறித்து இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கும்படி 1–வது மனுதாரர் இம்மனுவில் பரிகாரம் கேட்பது சட்டப்படி சரியானது அல்ல.

13) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து, மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்படத்தக்கதல்ல என்று இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**14) இறுதியாக,**

இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது. தரப்பினர்கள் தங்கள் செலவுத்தொகைகளை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2024–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 16–ம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**Sd/–**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

நாகர்கோவில்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை

**Sd/-**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

நாகர்கோவில்.

மு.மா.உ.நீ. நாகர்கோவில்.
அசல்/வரைவு உத்தரவு
இ.ம.எண்.1/2023 ன்
அ.வ.எண்.129/2023
நாள் : 16.11.2024.